# இங்கிலாந்தில் குழந்தைகள் மற்றும் வயதுவந்தவர்களுக்கான பிறவி இதய நோய்க் கோளாறுகளின்



# இங்கிலாந்தில் குழந்தைகள் மற்றும் வயதுவந்தவர்களுக்கான பிறவி இதய நோய்க் கோளாறுகளின் சேவைகளுக்கான தரங்களைச் செயல்படுத்துவதற்கான திட்டங்கள்

## கலந்தாய்வின் சுருக்கம்

முதலில் வெளியிடப்பட்ட நாள்: 9 பிப்ரவரி 2017

தயாரித்தவர்: சிறப்பு அதிகாரம், NHS இங்கிலாந்து

வகைப்பாடு: அதிகாரப்பூர்வமானது

# பொருளடக்கம்

பொருளடக்கம் ..... 3

சுருக்கம் ..... 4

1.1 அறிமுகம் ..... 4
1.2 பின்னணி ..... 5
1.3 தரங்களை நிறைவு செய்தல் ..... 6
1.4 ஆலோசனைக்கான திட்டங்கள் ..... 7
1.5 இந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதனால் என்ன பயன் கிடைக்கும்? கிடைக்கும்? ..... 10
1.6 எங்களது திட்டங்களைச் செயல்படுத்துவதன் சாத்தியமுள்ள தாக்கம் ... 11 11
1.7 எனது கருத்துக்களை நான் எவ்வாறு தெரிவிக்க முடியும்? ..... 12
பிற்சேர்க்கை A- ஆலோசனைக் கேள்விகள் ..... 13

# சுருக்கம்

## 1.1 அறிமுகம்

1. ஜூலை 2016-இல், இங்கிலாந்து குழந்தைகள் மற்றும் வயதுவந்தவர்களுக்கான பிறவி இதய நோய்க் கோளாறுகளின் (CHD) சேவைகளின் எதிர்காலம் தொடர்பான திட்டங்களின் தொகுப்பை NHS வெளியிட்டது. தற்போதும் எதிர்காலத்திலும், நாடு முழுவதும் உள்ள CHD நோயாளிகளுக்கான சிகிச்சையின் உறுதியான தரத்தை உறுதி செய்வதற்காக நாங்கள் எடுக்கத் திட்டமிட்டுள்ள நடவடிக்கைகள் அவற்றில் விவரிக்கப்பட்டுள்ளன.

2. CHD சேவைகளை வழங்குகின்ற ஒவ்வொரு மருத்துவமனையிலும் உறுதியான தேசிய சேவைத் தரங்களைச் செயல்படுத்துவதன் மூலம் இதைச் செய்வதற்கு நாங்கள் திட்டமிட்டுள்ளோம். நோயறிதல் முதல் சிகிச்சை வரையிலும், மற்றும் வீட்டிலிருந்தபடியே கவனிப்பைப் பெறுதல் மற்றும் வாழ்க்கை முழுவதற்குமான கவனிப்பு ஆகியவற்றுக்கான ஒட்டுமொத்த நோயாளி வழிமுறையை இந்த தரங்கள் உள்ளடக்கியிருக்கிறது. எங்களது திட்டங்கள் செயல்படுத்தப்பட்டால் அவற்றின் விளைவாக, சில மருத்துவமனைகளில் கூடுதலான CHD அறுவை சிகிச்சைகளும் செருகு வடிகுழாய் நடைமுறைகளும் மேற்கொள்ளப்படும், அதே நேரத்தில் சம்பந்தப்பட்ட தரங்களைப் பூர்த்தி செய்யாத மற்றவை இந்த வேலை செய்வதை நிறுத்திக்கொள்ளும்.

3. அதாவது, நாங்கள் செயல்பாட்டை நிறுத்துவதற்குத் திட்டமிட்டுள்ள ஒரு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை மற்றும் / அல்லது இடையீட்டு செருகு வடிகுழாய் நடைமுறைகளை தற்சமயம் பெறுவதற்குச் சாத்தியமுள்ள நோயாளிகள் எதிர்காலத்தில் வேறொரு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை மற்றும் / அல்லது இடையீட்டு செருகு வடிகுழாய் நடைமுறைகளைப் பெறுவதற்கு சாத்தியமுள்ளது. சில நோயாளிகள் அறுவை சிகிச்சை / இடையீட்டு செருகு வடிகுழாய் நடைமுறைகளுக்காகவும், மற்றும் அறுவை சிகிச்சைக்கு முந்தைய மற்றும் பிந்தைய ஒரு வருகைக்கு கூடுதலான தொலைவுக்கு பயணிக்க வேண்டியிருக்கலாம். இருப்பினும், பெரும்பாலான தொடர் கண்காணிப்பு வருகைகள் மற்றும் தற்போதைய கண்காணிப்பு மற்றும் கவனிப்பு ஆகியவற்றை வீட்டுக்கு அருகாமையிலேயே தொடர்ந்து பெற முடியும்.

4. எதிர்காலத்தில் CHD நோயாளிகள் எதிர்பார்க்கின்ற கவனிப்பின் அளவு கூட இதனால் மாறக்கூடும். இங்கிலாந்து முழுவதும் CHD சேவைகளை வழங்குகின்ற ஒவ்வொரு மருத்துவமனையிலும் முழுமையான தேசியத் தரங்களை நாங்கள் செயல்படுத்தினால், CHD க்கான சிகிச்சை பெறும் <u>ஒவ்வொரு</u> நோயாளியும் எந்த மருத்துவமனையில் அவர்கள் கவனிப்பைப் பெற்றாலும், ஒரே அளவிலான உயர் தரமான கவனிப்பைப் பெறுவதை நாங்கள்

நாங்கள் உறுதி செய்ய முடியும். இது அனைவருக்குமான சீரான மற்றும் சமமான உயர்தர சிகிச்சையைக் குறிக்கிறது.

## 1.2 பின்னணி

5. பிரிஸ்டல் ராயல் மருத்துவமனையில் சிக்கலான இதய அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட குழந்தைகளின் கவனிப்பு பற்றிய பொது விசாரணையில் தொடங்கி, தேசிய CHD தரங்கள் 2001 இல் வெளியிடப்பட்ட தொடர்ச்சியான மதிப்பாய்வுகள் மற்றும் விசாரணைகளின் விழிப்புணர்வு காரணமாக உருவாக்கப்பட்டது.

6. தரங்கள் CHD சேவைகளில் நேரடியான ஆர்வம் கொண்ட நோயாளிகள், குடும்பங்கள், பராமரிப்பாளர்கள் மற்றும் நோயாளிகளின் பிரதிநிதிகள் போன்றோரால், சேவைகளை வழங்குகின்ற அறுவை சிகிச்சை வல்லுநர்கள், இதய நோயாளிகள், சிறப்புச் செவிலியர்கள் மற்றும் இதர நபர்களுடன் இணைந்து உருவாக்கப்பட்டன. அனைத்துக் குழுக்களுக்கும் இடையே ஒருமித்த கருத்து எட்டப்பட்டது, மற்றும் ஜூலை 2015 இல் தரங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. CHD சேவைகளின் ஒரே தேசிய ஆணையராக NHS இங்கிலாந்து ஒரு உண்மையான தேசியச் சேவையைக் கட்டுப்படுத்துகின்ற தரங்களின் தொகுதியை நடைமுறைப்படுத்துவதன் மூலம், சேவை மேம்பாட்டுக்கு ஊக்கமளிக்கவும், அணுகலிலும் தரத்திலும் உள்ள மாறுபாட்டைக் குறைப்பதற்கும் ஒரு தனித்துவமான வாய்ப்பைக் கொண்டிருந்தது தெளிவாகத் தெரிந்தது.

7. இந்தத் தரங்கள் மிக உயர்வான தரத்தில் CHD சேவைகளை எவ்வாறு வழங்குவது என்பதை விவரிக்கின்றன. அவை உண்மையாகவே சவாலாக இருந்து வருகின்றன, மற்றும் மாற்றங்கள் அவை செயல்படும் விதமாக மாற்றியமைக்கப்படாவிட்டால் அனைத்து மருத்துவமனைகளுக்கும் அவற்றை நிறைவு செய்வது சிரமமானதாக இருக்கும் என NHS இங்கிலாந்து  வாரியத்தால் ஏற்கப்பட்டது. சில தரங்களை நிறைவு செய்வதற்கான காலக்கெடு வேறுபடுகின்றது, ஏனெனில் அவற்றில் சிலவற்றை நிறைவு செய்வதற்கு நீண்ட காலமாகும் எனப் புரிந்துகொள்ளப்பட்டது. குழந்தைகளின் CHD சேவைகளை குழந்தைகளின் இதர சிறப்புச் சேவைகளுடன் ஒன்றிணைப்பது இதற்கு உதாரணமாகும், இதற்கு ஒரு மருத்துவமனையின் கட்டமைப்பு அல்லது அமைப்புத்திட்டத்தில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கலாம்.

8. அனைத்து மருத்துவமனைகளும் தரங்களை நிறைவு செய்தவுடன், CHD யால் யால் பாதிக்கப்பட்ட அனைத்து நோயாளிகளும் சாத்தியமுள்ள மிக உயர்வான உயர்வான தரத்தைப் பெறுவார்கள். அதாவது, அவர்களும், அவர்களது குடும்பங்களும் / பராமரிப்பாளர்களும் சிறப்புச் செவிலியர்கள் மற்றும் உளவியலறிஞர்களிடமிருந்து உயர்நிலையிலான ஆதரவையும், மேம்பட்ட தகவல் மற்றும்  தகவல்தொடர்பையும் பெறுவார்கள். அதனால் அவர்கள் தங்களுடைய நிலைமையையும் சிகிச்சைத் தேர்வுகளையும் பற்றியும்,

குழந்தைகளிலிருந்து வயதுவந்தவர்களுக்கான சேவைகளுக்கான நன்கு நிர்வகிக்கப்படும் மாற்றத்தையும் நன்கு புரிந்துகொள்வார்கள். சிகிச்சை மருத்துவர்களும் இதர சிறப்புப் பணியாளர்களும் சரியான பணியமர்த்துதல் நிலைகள் மற்றும் திறன்களைப் பெற்றுள்ள ஒரு சூழ்நிலையில் பணிபுரிவார்கள், பணிபுரிவார்கள், அதாவது, சேவை நெகிழ்வுத்திறன் உள்ளதாகவும் உடல்நலக்குறைவு மற்றும் விடுமுறை / அவசரகாலப் பாதுகாப்பை நன்கு சமாளிக்கக் கூடியதாகவும் உள்ளது. மேலும் இது பயிற்சி மற்றும் கற்றல் பகிர்வுக்கான அதிக வாய்ப்புகளையும் பெற்றிருக்கும், மற்றும் அறுவை சிகிச்சை சிகிச்சை நிபுணர்கள் தங்களது திறன்களைப் பயிற்சி செய்வதற்கும் தக்கவைப்பதற்கும் அதிகமான வாய்ப்புகளைப் பெறுவார்கள், ஏனெனில் அவர்கள் அதிக அறுவை சிகிச்சைகளையும், இடையீட்டு நடைமுறைகளையும் நடைமுறைகளையும் மேற்கொள்கிறார்கள்.

9. இந்தக் கூறுகள் அனைத்தும் நோயாளிகளுக்கும், அவர்களது குடும்பங்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கும், மற்றும் உடல்நல விளைவுகளுக்கும் உண்மையான வேறுபாட்டை ஏற்படுத்துவதோடு, அவர்களுக்கு கவனிப்பை வழங்கும் அணிகளுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என நாங்கள் நினைக்கிறோம். CHD யால் பாதிக்கப்பட்ட <u>அனைத்து</u> நோயாளிகளும் அவர்கள் எங்கு சிகிச்சை பெற்றாலும் ஒரே மாதிரியாக வழங்கப்படும் உயர் தரத்திலான சேவைகளுக்கான அணுகலைப் பெற வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம்.

## 1.3 தரங்களை நிறைவு செய்தல்

10. தரங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டவுடன், தேவையான தரங்களை நிறைவு செய்கின்ற சேவைகளை வழங்குவதற்கு தற்சமயம் CHD சேவைகளை வழங்குகின்ற மருத்துவமனைகள் நெட்வொர்க்குகளில் இணைந்து செயல்பட முடியுமா என நாங்கள் பார்த்தோம். இந்த அணுகுமுறை தரங்களை நிறைவு செய்வதற்கான தேசியத் தீர்வினை வழங்கவில்லை. எனவே, குறிப்பிட்ட எண்ணிக்கையிலான தரங்களைப் பொறுத்த இணக்கத்தினை மதிப்பிடுவதற்கு ஒரு சுய-மதிப்பீட்டைப் பூர்த்தி செய்யுமாறு மருத்துவமனைகளிடம் நாங்கள் கேட்டுக்கொண்டோம். எந்தத் தரங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்பதைப் பற்றிய மருத்துவ ஆலோசனையைப் பெற்று, அளவிடக்கூடிய முடிவுகளுடனும் பாதுகாப்பு மற்றும் தரத்தை மேம்படுத்துவதிலும் மிக நெருங்கிய தொடர்புடைய மொத்தம் 14 தேவைகளை நாங்கள் தேர்வு செய்தோம்.

11. எங்களுடைய திட்டங்களுக்குப் பொருத்தமாக மூன்று குறிப்பான தரங்கள் உள்ளன:

- அறுவை சிகிச்சை நிபுணருக்கான வேலைத் தேவைகள் – ஒவ்வொரு மருத்துவமனையிலும் உள்ள அறுவை சிகிச்சை நிபுணர்களின் எண்ணிக்கை, எண்ணிக்கை, மற்றும் அவர்கள் மேற்கொள்ளும் அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை.

- இந்தத் தரங்களின் படி, 2016 இல் அறுவை சிகிச்சை நிபுணர்கள் குறைந்தபட்சம் மூன்று அறுவை சிகிச்சை நிபுணர்களைக் கொண்ட அணிகளாக வேலை செய்கிறார்கள், மேலும் ஏப்ரல் 2021 க்குள் குறைந்தபட்சம் நான்கு அறுவை சிகிச்சை நிபுணர்களைக் கொண்ட அணிகளாக வேலை செய்வார்கள். CHD அறுவை சிகிச்சை நிபுணர்கள் ஒவ்வொருவரும் மூன்றாண்டு காலத்துக்கு சராசரியாக ஆண்டொன்றுக்கு 125 க்குக் குறையாமல் (ஒரு வாரத்துக்கு சுமார் மூன்று அறுவை சிகிச்சைகளுக்குச் சமமாக) பிறவி இதய நோய் அறுவை சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டும்;

- சேவை இடைச்சார்புகள், அல்லது CHD நோயாளிகள் சார்ந்துள்ள இதர சேவைகளின் ஒருங்கிணைப்பு, மற்றும் அவை ஒரே மருத்துவமனைத் தளத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

  - இந்தத் தரங்களுக்கு, குழந்தைகளுக்கான இதய சேவைகள் அதே மருத்துவமனைத் தளத்தில் பரந்த அளவில் இதர சிறப்பு குழந்தைகளின் சேவைகள் காணப்படுகின்ற அமைப்புகளில் மட்டுமே வழங்கப்படுகின்றன. இந்தத் தரங்களின் படி, ஏப்ரல் 2016-இல் குறிப்பிட்ட குழந்தைகள் நல சிறப்பு மருத்துவமனைகள் வீட்டில் இருந்து 30-நிமிட நேரத்துக்குள் சென்றுவிடும் தொலைவிலும், மற்றும் 2019 ஆம் ஆண்டுக்குள் குழந்தைகளின் CHD சேவைகளின் சேவைகள் கிடைக்கின்ற அதே மருத்துவமனையிலும் அமைக்கப்பட வேண்டும்.

குறுக்கீடுசார் இதய நோய்

- இந்தத் தரங்களின் படி, 2016-ஆம் ஆண்டில் குறுக்கீடுசார் இதயநோய் வல்லுநர்கள் குறைந்தபட்சம் மூன்று பேர் கொண்ட அணியாகவும், ஏப்ரல் 2017 க்குள் குறைந்தபட்சம் நான்கு பேர் கொண்ட அணிகளாகவும் வேலை செய்ய வேண்டும், இதில் முன்னணி குறுக்கீடுசார் இதயநோய் வல்லுநர் ஆண்டொன்றுக்கு குறைந்தபட்சம் 100 செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டும், மற்றும் குறுக்கீடுசார் இதயநோய் வல்லுநர்கள் அனைவரும் ஆண்டொன்றுக்கு குறைந்தபட்சம் 50 செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

## 1.4 ஆலோசனைக்கான திட்டங்கள்

12. மருத்துவமனைகளால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல் தேசியக் குழுவால் பரிசீலிக்கப்பட்டது, இது நோயாளியின் பிரதிநிதிகள், சிகிச்சை மருத்துவர்கள் மருத்துவர்கள் மற்றும் ஆணையர்கள் ஆகியோரை உள்ளடக்கியிருந்தது. தரங்களை நிறைவு செய்வதற்கான ஒவ்வொரு மருத்துவமனையின் திறனையும் திறனையும் குழு மதிப்பிட்டது, மேலும் அந்தச் சமயத்தில் அவற்றில் <u>எதுவுமே எதுவுமே</u> சோதிக்கப்பட்ட தரங்களை நிறைவு செய்யவில்லை என்பதைக்

கண்டறிந்தது. தரங்கள் மருத்துவமனைகளை 'விரிவாக்கும்' எனவும், மருத்துவமனைகளில் வழங்கப்படும் அனைத்து சேவைகளையும் சிறந்த நடைமுறைகளுக்கான நிலை வரை தொடர்ந்து மேம்படுத்தும் எனவும் எதிர்பார்க்கப்பட்டதால், இந்த நிலை எதிர்பாராததாக இருந்தது.

13. பெரும்பாலான மருத்துவமனைகள் தேவைகளை நிறைவு செய்யும் நிலையில் இருந்தன, அல்லது அவற்றின் திட்டங்களை மேற்கொண்டு மேம்படுத்துவதன் மூலம் தேவையான காலகட்டத்துக்குள் அவற்றை நிறைவு செய்வதற்கு சாத்தியமிருப்பதாக கருதப்பட்டன. அவை பச்சை / அம்பர், அல்லது அம்பர் நிறத்தில் மதிப்பிடப்பட்டன

- அவற்றில் லெசெஸ்டர் NHS டிரஸ்ட் பல்கலைக்கழக மருத்துவமனை, நியூகேஸ்டில் அபான் டைன் ஹாஸ்பிட்டல்ஸ் NHS ஃபவுண்டேஷன் டிரஸ்ட், மற்றும் ராயல் பிராம்ப்டன் மற்றும் ஹேர்ஃபீல்ட் NHS ஃபவுண்டேஷன் டிரஸ்ட் ஆகிய மூன்று மருத்துவமனைகள் ஏப்ரல் 2016-க்கான தேவைகளை நிறைவு செய்ய முடியவில்லை, மற்றும் அவை தேவையான காலகட்டத்துக்குள் அதைச் செய்து முடிப்பதற்கு சாத்தியமில்லை எனக் கருதப்பட்டது. அவை பச்சை / அம்பர் நிறத்தில் மதிப்பிடப்பட்டன

  மத்திய மான்செஸ்டர் பல்கலைக்கழக மருத்துவமனை NHS ஃபவுண்டேஷன் டிரஸ்ட் எனப்படும் ஒரு மருத்துவமனை அப்பொழுது தேவைகளை நிறைவு செய்ய இயலாததாக இருந்தது, மற்றும் அது தேவையான காலகட்டத்துக்குள் அதைச் செய்து முடிப்பதற்கு சாத்தியமில்லை எனக் கருதப்பட்டது. மான்செஸ்டரில் அமர்வு அடிப்படையில் வழங்கப்பட்ட குறுக்கீடுசார் இதய நோய்க்கு, ஒரே ஒரு அறுவை சிகிச்சை நிபுணர் ஒரு ஆண்டுக்கு 100 க்கும் குறைவான அறுவை சிகிச்சைகளையே மேற்கொள்கிறார். பொருத்தமான 24/7 அறுவை சிகிச்சை அல்லது குறுக்கீடுசார் பாதுகாப்பு வழங்கப்படவில்லை. தேசியக் குழு இந்த ஏற்பாடுகளில் ஆபத்து இருப்பதாக கருதியது, மற்றும் மையத்தை சிவப்பு நிறத்தில் மதிப்பிட்டது.

14. ஒவ்வொரு நோயாளியும் அவர்களது பராமரிப்பு தேவையான தரங்களை நிறைவு செய்யக்கூடிய ஒரு மருத்துவமனை மூலம் வழங்கப்படுகிறது என்ற என்ற நம்பிக்கையைக் கொண்டிருக்க வேண்டும் என்ற எங்களது நோக்கமே எங்களது திட்டங்களின் மையமாக விளங்குகிறது. இதை அடைவதற்காக எதிர்காலத்தில் NHS இங்கிலாந்து தேவையான காலகட்டத்துக்குள் தரங்களை நிறைவு செய்ய முடிகின்ற மருத்துவமனைகளிலிருந்து மட்டுமே CHD சேவைகளைச் செயல்படுத்தும் என நாங்கள் முன்மொழிகிறோம். எங்களது திட்டங்கள் செயல்படுத்தப்பட்டால், அதன் விளைவாக சில மருத்துவமனைகள் மருத்துவமனைகள் அதிகமான CHD அறுவை சிகிச்சை மற்றும் செருகு வடிகுழாய் நடைமுறைகளை மேற்கொள்ளும். அதே நேரம், தொடர்புடைய

தரங்களை நிறைவு செய்யாத மற்றவை இந்த வேலையைச் செய்வதை நிறுத்திக்கொள்ளும்.

15. அதாவது, நடைமுறையில் எங்களது திட்டங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டால் எதிர்காலத்தில்:

- வயதுவந்தவர்களுக்கான அறுவை சிகிச்சை மற்றும் குறுக்கீடுசார் இதயநோய் சிகிச்சை மத்திய மான்செஸ்டர் பல்கலைக்கழக மருத்துவமனை NHS ஃபவுண்டேஷன் டிரஸ்டில் நிறுத்தப்படும், மற்றும் அத்தகைய நடைமுறைகள் தேவைப்படும் நோயாளிகள் லிவர்பூல் இதயம் மற்றும் மார்பு மருத்துவமனை NHS ஃபவுண்டேஷன் டிரஸ்ட்டுக்கு செல்வதற்கு அதிகம் சாத்தியமுள்ளது. <u>அனைத்து இதர வகை சிகிச்சைகள்,</u> அதாவது, அறுவை சிகிச்சை மற்றும் / அல்லது குறுக்கீடுசார் இதய நோய் சிகிச்சையைத் தவிர வேறு ஏதாவது சிகிச்சை தேவைப்படுகின்ற நோயாளிகள் மான்செஸ்டரில் தங்களுக்கான பராமரிப்பைப் பெற முடியும். இந்த விருப்பத்தேர்வு குறித்து மருத்துவமனையின் அறக்கட்டளையுடன் நாங்கள் தொடர்ந்து விவாதித்து வருகிறோம்.

- குழந்தைகள் மற்றும் வயதுவந்தவர்களுக்கான அறுவைச் சிகிச்சை மற்றும் குறுக்கீடுசார் இதயநோய் சிகிச்சை ராயல் பிராம்ப்டன் மற்றும் ஹேர்ஃபீல்டு NHS ஃபவுண்டேஷன் டிரஸ்ட்டில் நிறுத்தப்படும், மற்றும் அத்தகைய நடைமுறைகள் தேவைப்படும் நோயாளிகள் தங்களுக்கான பராமரிப்பை குழந்தைகளுக்கான கிரேட் ஆர்மண்ட் தெரு NHS ஃபவுண்டேஷன் டிரஸ்ட், பார்ட்ஸ் ஹெல்த் NHS டிரஸ்ட் அல்லது கய்'ஸ் மற்றும் செயின்ட் தாமஸ் NHS ஃபவுண்டேஷன் டிரஸ்ட் ஆகிய இடங்களில் பெறுவார்கள். மருத்துவமனை அறக்கட்டளை வயதுவந்தவர்களுக்கு மட்டும் அறுவை சிகிச்சை மற்றும் குறுக்கீடுசார் இதயநோய் சிகிச்சையைத் தொடர்ந்து வழங்குவதற்கு சாத்தியமுள்ளது. இந்த விருப்பத்தேர்வு பற்றிய விவாதம் நடந்துகொண்டிருக்கிறது.
- குழந்தைகள் மற்றும் வயதுவந்தவர்களுக்கான அறுவை சிகிச்சை மற்றும் குறுக்கீடுசார் இதயநோய் சிகிச்சை லீசெஸ்டர் பல்கலைக்கழக மருத்துவமனை NHS ஃபவுண்டேஷன் டிரஸ்டில் நிறுத்தப்படும், மற்றும் அத்தகைய நடைமுறைகள் தேவைப்படும் நோயாளிகள் தங்களுக்கான பராமரிப்பை பிர்மிங்ஹாம் குழந்தைகள் மருத்துவமனை NHS ஃபவுண்டேஷன் டிரஸ்ட்டிலோ, அல்லது பிர்மிங்ஹாமை விட அருகில் உள்ள சில நோயாளிகளுக்கு லீட்ஸ் டீச்சிங் ஹாஸ்பிட்டல்ஸ் NHS டிரஸ்ட்டிலோ தங்கள் பராமரிப்பைப் பெறுவதற்கு சாத்தியமுள்ளது.  மருத்துவமனை அறக்கட்டளை குழந்தைகளுக்கும் வயதுவந்தவர்களுக்கும் அறுவைச் சிகிச்சை மற்றும் குறுக்கீடுசார் இதயநோய் சிகிச்சையைத் <u>தவிர இதர</u> CHD சேவைகளைத் தொடர்ந்து வழங்குவதற்கு சாத்தியமுள்ளது. இந்த விருப்பத்தேர்வு பற்றிய விவாதம் நடந்துகொண்டிருக்கிறது.

16. நியூகேஸ்டில் அபான் டைன் ஹாஸ்பிட்டல்ஸ் NHS ஃபவுண்டேஷன் டிரஸ்ட்டுக்கு லீசெஸ்டர் பல்கலைக்கழக மருத்துவமனை NHS டிரஸ்ட் மற்றும்

மற்றும் ராயல் பிராம்ப்டன் மற்றும் ஹேர்ஃபீல்ட் NHS ஃபவுண்டேஷன் டிரஸ்ட் டிரஸ்ட் ஆகியவற்றைப் போலவே அம்பர் / சிவப்பு நிற மதிப்பீடு வழங்கப்பட்டது. இருப்பினும், இதய மாற்று அறுவைச் சிகிச்சை மற்றும் மாற்று மாற்று அறுவை சிகிச்சைக்கான இணைப்பு ஆகியவை உட்பட, தீவிர இதய செயலிழப்பினால் பாதிக்கப்பட்ட CHD நோயாளிகளுக்கு பராமரிப்பு வழங்குவதில் நியூகேஸ்டில் தனித்துவமான பங்கைக் கொண்டுள்ளது, மற்றும் மற்றும் நோயாளிகளிடம் எந்த ஒரு எதிர்விளைவும் இன்றி குறுகிய காலத்தில் காலத்தில் இதை மாற்ற முடியாது.  எனவே சமநிலையின் படி, நியூகேஸ்டிலில் நியூகேஸ்டிலில் இருந்து நிலை 1 CHD சேவைகளைத் தொடர்ந்து செயல்படுத்துவது சிறந்தது என்பது நமது தற்போதைய கண்ணோட்டம் ஆகும். ஆகும். CHD அறுவை சிகிச்சை மற்றும் இதய மாற்றுச் சிகிச்சைகளில் அதே அறுவை சிகிச்சை நிபுணர்களே ஈடுபடுவார்கள், எனவே அவை இரண்டும் ஒன்றாக இணைக்கப்பட வேண்டும்.

17. நியூகேஸ்டில் அபான் டைன் ஹாஸ்பிட்டல்ஸ் NHS ஃபவுண்டேஷன் டிரஸ்ட்டில் ஏற்பட்டுள்ள மாற்றம் நீண்ட கால அடிப்படையில் இருக்காது என்பதை இது தெரிவிக்காது. மருத்துவமனை அறக்கட்டளை இதர அனைத்து நிலை 1 அறுவை சிகிச்சை மையங்களைப் போலவே தரங்களை நிறைவு செய்ய வேண்டும். இதைச் செய்வதற்கான காலக்கெடு வேறுபடலாம், ஆனால் நியூகேஸ்டில் அபான் டைன் ஹாஸ்பிட்டல்ஸ் NHS ஃபவுண்டேஷன் டிரஸ்ட்டில் CHD பராமரிப்பைப் பெறும் நோயாளிகள் எந்த வகையிலும் விட்டுக்கொடுக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்கு நாங்கள் மருத்துவமனையுடன் இணைந்து நெருக்கமாக செயல்படுவோம்.

## 1.5 இந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதனால் என்ன பயன் கிடைக்கும்?

18. நோயாளிகள் எங்கு சிகிச்சை பெறுகிறார்கள் என்ற பேதம் ஏதுமின்றி, அவர்கள் உயர்ந்த தரத்திலான பராமரிப்பு பெறுவதை உறுதி செய்வதற்கு CHD க்கான தேசியத் தரங்களைச் செயல்படுத்துவது மட்டுமே ஒரே வழி என நாங்கள் நம்புகிறோம். எங்கு மருத்துவமனைகள் தரங்களை நிறைவு செய்கின்றன என்பதைப் பொறுத்து தற்சமயம் சில வேறுபாடுகள் உள்ளன. எனவே இங்கிலாந்தில் நீங்கள் எங்கு சேவைகளைப் பெறுகிறீர்கள் என்பதைப் பொறுத்து பராமரிப்பு மாறுபடக்கூடும்.

19. NHS ஆனது சுமார் 20 வருடங்களாக CHD நோயாளிகளுக்கு மேம்பட்ட பராமரிப்பை வழங்க முயற்சி செய்துகொண்டிருக்கிறது, அதே சமயம் முந்தைய முந்தைய மதிப்பாய்வுகள் மற்றும் விசாரணைகளிலிருந்து நாங்கள் அதிகம் கற்றுக்கொண்டுள்ளோம், மருத்துவமனைகளுக்கு இடையிலான உறவுகளை உறவுகளை சேதப்படுத்தியுள்ள இந்தச் சேவைகளின் மீது நிச்சயமற்ற தன்மையின் மேகம் சூழ்ந்துள்ளது; பணியாளர்கள் நியமனத்தில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது; மற்றும் இந்தச் சேவைகளின் மீள்சக்தி குறைக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் உறுதிப்பாட்டையும் நிலையான

அணுகுமுறையையும் அறிமுகப்படுத்துவதன் மூலம், எதிர்காலத்துக்கான நிலையான, நெகிழ்திறன் மிக்க மற்றும் நீடித்துழைக்கின்ற தேசிய சேவையை நாம் உருவாக்க வேண்டியுள்ளது.

## 1.6 எங்களது திட்டங்களைச் செயல்படுத்துவதன் சாத்தியமுள்ள தாக்கம்

### தாக்கம்

20. நோயாளிகளிடமும் அவர்களது குடும்பங்கள் / பராமரிப்பாளர்கள், சிகிச்சை மருத்துவர்கள் மற்றும் இதர மருத்துவமனைப் பணியாளர்களுடனும் பேசியதிலிருந்து, எங்களது திட்டங்கள் பற்றிய பிரச்சனைகள் உள்ளன என்பதையும், அவற்றைச் செயல்படுத்துவதால் அவர்களுக்கு தனிப்பட்ட முறையில், அல்லது அவர்களது வேலைகள், அல்லது மருத்துவமனைகளின் இதர சேவைகளில் எவ்வாறு பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என்பதையும் நாங்கள் தெரிந்திருக்கிறோம். இந்தப் பிரச்சனைகளை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம், அதனால் தான் நாங்கள் ஒரு முழுமையான பொது ஆலோசனை நடத்தி வருகின்றோம். அதன் மூலம் எங்களது திட்டங்களைப் பற்றி உங்களுடன் மிக விரிவாகப் பேச முடியும், மற்றும் தரங்களைச் செயல்படுத்துவது உங்களிடம், உங்கள் குடும்பத்தினரிடம் அல்லது நீங்கள் வேலை செய்யுமிடத்தில் என்ன தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என நீங்கள் நினைக்கிறீர்கள் என்பதைப் பற்றி மேலும் தெரிந்துகொள்ள முடியும். எங்களது திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் கூட, 2018 ஆம் ஆண்டின் தொடக்கம் வரையிலும் மாற்றம் நடைபெறாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டியது முக்கியமானதாகும். மேலும், நோயாளியின் கவனிப்பில் தடங்கல் ஏற்படாமல் இருப்பதை அல்லது தேவையின்றி பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்கு நாங்கள் அனைத்து மருத்துவமனைகளுடனும் நெருக்கமாக இணைந்து செயல்படுகிறோம்.

21. ஆலோசனைக்கு முந்தைய காலகட்டத்தின்போது மக்களிடம் பேசியதிலிருந்து, குறிப்பாக நோயாளிகள் எதிர்காலத்தில் தாங்கள் எங்கு சிகிச்சை பெற முடியும் என்பதைப் பற்றி கவலை கொண்டுள்ளனர் என்பதை நாங்கள் அறிந்தோம். எங்களது திட்டங்கள் செயல்படுத்தப்பட்டால், அறுவைச் சிகிச்சைக்காக அல்லது செருகு வடிகுழாய் நடைமுறைக்காக தங்களது புதிய மருத்துவமனைக்குச் செல்ல வேண்டியிருக்கும்போது சிலருக்கு பயண நேரம் அதிகரிக்கக்கூடும். பயண நேரத்தில் ஏற்படும் சராசரி அதிகரிப்பு ஓரளவுக்குக் குறைவாகவே இருக்கும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம், இருப்பினும் சில நோயாளிகளுக்கு அது கணிசமான அளவுக்கு அதிகமானதாக இருக்கும் என்பதை நாங்கள் அறிவோம். இந்தக் கூடுதலான பயண நேரம் சிலருக்கு சிரமத்தை ஏற்படுத்தக் கூடும் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம், தேசியத் தரங்களை முழுமையாக நிறைவு செய்கின்ற ஒரு மருத்துவமனையில் சிகிச்சை பெறுவது இறுதியில் நோயாளிகளுக்கு பலனளிப்பதாகவே இருக்கும் என நாங்கள் நினைக்கிறோம்.

22. அதிர்ஷ்டவசமாக, CHD அறுவை சிகிச்சைக்கான பெரும்பாலான மருத்துவமனை அனுமதிகள் திட்டமிடப்பட்டவையாக உள்ளன, மற்றும் CHD நோயாளிகளில் மிகச் சிலரே உண்மையில் அவசரகால அனுமதியில் சேர்க்கப்பட்டிருந்தனர். CHD இருப்பது கருவிலேயே கண்டறியப்படாத நிகழ்வுகளில் கூட, குழந்தை பிறந்த உடனேயே அறுவை சிகிச்சை தேவைப்படுகிறது. அந்த அறுவை சிகிச்சை ஒரு சில நாட்களுக்குள் மேற்கொள்ளப்படும், மற்றும் பிறந்த குழந்தைகள் நிலைப்படுத்தப்பட்டு, நிபுணத்துவமிக்க மற்றும் மிகவும் திறமை வாய்ந்த குழந்தைகளின் போக்குவரத்து அணியால் ஒரு அறுவை சிகிச்சை மையத்துக்கு எடுத்துச் செல்லப்படுகின்றனர். இதே நடைமுறை வயதுவந்த நோயாளிகளுக்கும் பின்பற்றப்படுகிறது.

23. மேலும், குழந்தைகள் தீவிர சிகிச்சை போன்ற இதர மருத்துவச் சேவைகளிலும் மற்றும் பரந்த அளவில் மருத்துவமனைகள் மற்றும் அவர்களது பணியாளர்கள் மீதும் எங்களது திட்டங்கள் ஏற்படுத்தும் தாக்கம் பற்றிய பிரச்சனை இருக்கிறது என்பதும் நமக்குத் தெரியும். பாதிக்கப்பட்ட ஒவ்வொரு மருத்துவமனைக்கும் எமது திட்டங்களின் செயல்படுத்தல் எதைக் குறிக்கும் என்பதைப் பற்றி விவரிக்கின்ற முறையான தாக்க மதிப்பீடுகள் பொது ஆலோசனைக்கான எங்களது திட்டமிடலின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 1.7 எனது கருத்துக்களை நான் எவ்வாறு தெரிவிக்க முடியும்?

24. ஆலோசனையின்போது CHD சேவைகளின் எதிர்காலம் பற்றிய உங்கள் கருத்துக்களைச் சொல்வதற்கு பல வாய்ப்புகள் உங்களுக்கு வழங்கப்படும். இந்த முக்கியமான சேவைகளைப் பற்றிய ஒருவரது கருத்துக்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென நாங்கள் ஆர்வத்துடன் இருக்கிறோம், மற்றும் எங்களது திட்டங்களைப் பற்றி உங்களிடம் நாங்கள் கேட்க விரும்புகின்ற எண்ணற்ற கேள்விகளை நாங்கள் அமைத்துள்ளோம். இந்தக் கேள்விகளுக்கான பதில்கள் சுதந்திரமாக ஆய்வு செய்யப்படும், மற்றும் ஒரு முடிவு எடுப்பதற்கு முன் இவை NHS இங்கிலாந்து வாரியத்தால் பரிசீலனை செய்யப்படும்.

25. நாங்கள் பொதுக் கூட்டங்கள், இணையத்தளக் கருத்தரங்குகள் மற்றும் டுவிட்டர் சாட்கள் போன்ற எண்ணற்ற நிகழ்ச்சிகளை நடத்துவோம், எனவே எங்களிடம் கேள்விகள் கேட்பதற்கும், எங்களது திட்டங்களைப் பற்றி நிறையத் தெரிந்துகொள்வதற்கும் பல வழிகள் இருக்கும்.

26. ஆலோசனைக்கான கேள்விகளையும், மற்றும் இந்தப் பொது ஆலோசனை பற்றிய இதர அனைத்துத் தகவல்களையும் எங்களது ஆலோசனை மையத்தில் மையத்தில் நீங்கள் காண முடியும். ஆலோசனைக்கான கேள்விகள் நீங்கள் எளிதாகப் பார்க்கும் பொருட்டு பிற்சேர்க்கை A-யில் இணைக்கப்பட்டுள்ளன. இணைக்கப்பட்டுள்ளன. ஆலோசனைக்கான பதில்களை நீங்கள் தபால்

மூலமாக எங்களுக்கு அனுப்ப விரும்பினால், தயவுசெய்து இணைக்கப்பட்டுள்ள இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் உள்ள கேள்விகளுக்கு பதிலளித்து, அதை பின்வரும் முகவரிக்கு எங்களுக்குத் திரும்ப அனுப்பவும்:

CHD Consultation
c/o Beverley Smyth (Specialised Commissioning)
NHS England
4N08| Quarry House| Quarry Hill | Leeds | LS2 7UE

27. நீங்கள் தேடுகின்ற தகவல் உங்களுக்குக் கிடைக்காவிட்டாலோ, அல்லது இந்த இந்த ஆலோசனை குறித்து உங்களுக்கு வேறு ஏதேனும் கேள்விகள் இருந்தாலோ, தயவுசெய்து england.congenitalheart@nhs.net என்ற இணைப்பில் எங்களைத் தொடர்புகொள்ளுங்கள்.

## பிற்சேர்க்கை A- ஆலோசனைக் கேள்விகள்

**தரங்களை நிறைவு செய்தல்**

**1.** நீங்கள் எந்தத் தகுதியில் ஆலோசனைக்கு பதிலளிக்கிறீர்கள்?

- ☐ தற்போதைய CHD நோயாளி

- ☐ தற்போதைய CHD நோயாளியின் பெற்றோர், குடும்ப உறுப்பினர் அல்லது பராமரிப்பாளர்
- ☐ பொதுமக்களில் ஒருவர்
- ☐ CHD நோயாளியின் பிரதிநிதி நிறுவனம்
- ☐ தன்னார்வ நிறுவனம் / அறக்கட்டளை
- ☐ சிகிச்சை மருத்துவர்
- ☐ NHS வழங்குநர் நிறுவனம்
- ☐ NHS ஆணையர்
- ☐ தொழில்துறை
- ☐ இதர அரசு அமைப்பு
- ☐ மற்றவை

மற்றவையாக இருந்தால் – தயவுசெய்து குறிப்பிடவும்:

______________________________________________________________

**2.** நீங்கள் எந்த மண்டலத்திலிருந்து வருகிறீர்கள்?

- ☐ பொருந்தாது / மண்டல / தேசிய அமைப்பு
- ☐ இங்கிலாந்து - வட கிழக்கு
- ☐ இங்கிலாந்து - வட மேற்கு
- ☐ இங்கிலாந்து - யோர்க்ஷீர் மற்றும் தி ஹம்பர்
- ☐ இங்கிலாந்து - ஈஸ்ட் மிட்லாண்ட்கள்
- ☐ இங்கிலாந்து - வெஸ்ட் மிட்லாண்ட்கள்
- ☐ இங்கிலாந்து - கிழக்கு இங்கிலாந்து
- ☐ இங்கிலாந்து - லண்டன்
- ☐ இங்கிலாந்து - தென் கிழக்கு
- ☐ இங்கிலாந்து - தென் மேற்கு
- ☐ ஸ்காட்லாந்து
- ☐ வேல்ஸ்
- ☐ வட அயர்லாந்து

3. எதிர்கால பிறவி இதய நோய்க்கான சேவைகள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முழுமையான தரத் தொகுப்பை நிறைவு செய்ய முடிகின்ற மருத்துவமனைகளில் மட்டுமே செயல்படுத்தப்படும் என NHS இங்கிலாந்து திட்டமிட்டுள்ளது. இந்தத் திட்டத்தை நீங்கள் எந்த அளவுக்கு ஆதரிக்கிறீர்கள் அல்லது எதிர்க்கிறீர்கள்?

- ☐ வலுவாக ஆதரிக்கிறேன்
- ☐ ஆதரிக்க அதிக வாய்ப்புள்ளது
- ☐ ஆதரிக்கவும் மாட்டேன் அல்லது எதிர்க்கவும் மாட்டேன்
- ☐ எதிர்க்க அதிக வாய்ப்புள்ளது
- ☐ வலுவாக எதிர்க்கிறேன்

4. தயவுசெய்து கேள்வி 3-க்கான உங்கள் பதிலை விளக்கவும்.

| |
|---|
| |

மூன்று மருத்துவமனை அறக்கட்டளைகள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் தரங்களை முழுமையாக நிறைவு செய்யவில்லை என மதிப்பிடப்பட்டுள்ளன. எனவே, பின்வரும் மருத்துவமனைகளில் அறுவைச் சிகிச்சை (நிலை 1) சேவைகள் மேற்கொண்டு செயல்படுத்தப்படாது என்பதை முன்மொழிகிறது:

- **மத்திய மான்செஸ்டர் பல்கலைக்கழக மருத்துவமனை NHS ஃபவுண்டேஷன் டிரஸ்ட்** (**Central Manchester University Hospitals NHS Foundation Trust**) (வயதுவந்தோர் சேவை)
- **ராயல் பிராம்ப்டன் மற்றும் ஹேர்ஃபீல்ட் NHS ஃபவுண்டேஷன் டிரஸ்ட் (Royal Brompton & Harefield NHS Foundation Trust)** (வயதுவந்தவர்கள் மற்றும் குழந்தைகளுக்கான சேவைகள்); மற்றும்
- **லீசெஸ்டர் பல்கலைக்கழக மருத்துவமனை NHS டிரஸ்ட் (University Hospitals of Leicester NHS Trust)** (வயதுவந்தவர்கள் மற்றும் குழந்தைகளுக்கான சேவைகள்).

5. நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் தரங்களை நிறைவு செய்வதற்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அறக்கட்டளைகளுக்கு ஆதரவளிக்க எடுக்கப்படவிருக்கும் சாத்தியமான நடவடிக்கைகளைப் பற்றி நீங்கள் நினைத்துப் பார்க்க முடிகிறதா?

| |
|---|
| |

**மத்திய மான்செஸ்டர் பல்கலைக்கழக மருத்துவமனை NHS ஃபவுண்டேஷன் டிரஸ்ட் மற்றும் லீசெஸ்டர் பல்கலைக்கழக மருத்துவமனை NHS டிரஸ்ட் (Central Manchester University Hospitals NHS Foundation Trust and University Hospitals of Leicester NHS Trust)**

மத்திய மான்செஸ்டர் மற்றும் லீசெஸ்டர் ஆகியவை இனிமேல் அறுவை சிகிச்சை (நிலை 1) சேவைகளை வழங்காவிட்டால், நிலை 2 சேவைகளுக்கான தரங்களை மருத்துவமனைகள் நிறைவு செய்யும் வரை அவற்றிலிருந்து சிறப்பு மருத்துவச் சேவைகளை (நிலை 2) வழங்குமாறு NHS இங்கிலாந்து கேட்டுக்கொள்ளும். இந்தத் திட்டத்தை நீங்கள் எந்த அளவுக்கு ஆதரிக்கிறீர்கள் அல்லது எதிர்க்கிறீர்கள்?

- ☐ வலுவாக ஆதரிக்கிறேன்
- ☐ ஆதரிக்க அதிக வாய்ப்புள்ளது
- ☐ ஆதரிக்கவும் மாட்டேன் அல்லது எதிர்க்கவும் மாட்டேன்
- ☐ எதிர்க்க அதிக வாய்ப்புள்ளது
- ☐ வலுவாக எதிர்க்கிறேன்

**ராயல் பிராம்ப்டன் மற்றும் ஹேர்ஃபீல்ட் NHS ஃபவுண்டேஷன் டிரஸ்ட் (Royal Brompton and Harefield NHS Foundation Trust)**

6. குழந்தைகளுக்கான அறுவை சிகிச்சை (நிலை 1) சேவைகளை வழங்குகின்ற மற்றொரு மருத்துவமனையுடன் ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலம் வயதுவந்தவர்களுக்கான அறுவைச் சிகிச்சை (நிலை 1) சேவைகளை வழங்குவதற்கான தரங்களை ராயல் பிராம்ப்டன் நிறைவு செய்ய முடியும். வயதுவந்தோர் சேவைகளை கைவிடுவதற்கு மாற்றாக, NHS இங்கிலாந்து இந்த வகைச் செயல்பாட்டை ஆதரிக்க விரும்புகிறது.

வயதுவந்தவருக்கு மட்டும் (நிலை 1) சேவையை ராயல் பிராம்ப்டன் வழங்குவதற்கான திட்டத்தை நீங்கள் எந்த அளவுக்கு ஆதரிக்கிறீர்கள் அல்லது எதிர்க்கிறீர்கள்?

- ☐ வலுவாக ஆதரிக்கிறேன்
- ☐ ஆதரிக்க அதிக வாய்ப்புள்ளது
- ☐ ஆதரிக்கவும் மாட்டேன் அல்லது எதிர்க்கவும் மாட்டேன்
- ☐ எதிர்க்க அதிக வாய்ப்புள்ளது
- ☐ வலுவாக எதிர்க்கிறேன்

**நியூகேஸ்டில் அபான் டைன் ஹாஸ்பிட்டல்ஸ் NHS ஃபவுண்டேஷன் டிரஸ்ட் (Newcastle upon Tyne Hospitals NHS Foundation Trust)**

7. வெவ்வேறு காலகட்டத்தில் தரங்களை வழங்குவதற்கு அவர்களுடன் இணைந்து செயல்படுகின்ற அதே நேரம், நியூகேஸ்டில் அபான் டைன் ஹாஸ்பிட்டல்ஸ் NHS ஃபவுண்டேஷன் டிரஸ்ட்டிலிருந்து அறுவை சிகிச்சை (நிலை 1) சேவைகளைச் செயலாற்றத் தொடர்வதற்கு NHS இங்கிலாந்து திட்டமிட்டுள்ளது. இந்தத் திட்டத்தை நீங்கள் எந்த அளவுக்கு ஆதரிக்கிறீர்கள் அல்லது எதிர்க்கிறீர்கள்?

   - ☐ வலுவாக ஆதரிக்கிறேன்
   - ☐ ஆதரிக்க அதிக வாய்ப்புள்ளது
   - ☐ ஆதரிக்கவும் மாட்டேன் அல்லது எதிர்க்கவும் மாட்டேன்
   - ☐ எதிர்க்க அதிக வாய்ப்புள்ளது
   - ☐ வலுவாக எதிர்க்கிறேன்

**பயணம்**

மத்திய மான்செஸ்டர் பல்கலைக்கழக மருத்துவமனை NHS ஃபவுண்டேஷன் டிரஸ்ட் (வயதுவந்தோர் சேவை); ராயல் பிராம்ப்டன் மற்றும் ஹேர்ஃபீல்ட் NHS ஃபவுண்டேஷன் டிரஸ்ட்; மற்றும் லீசெஸ்டர் NHS டிரஸ்ட் பல்கலைக்கழக மருத்துவமனை (வயதுவந்தவர் மற்றும் குழந்தைகளுக்கான சேவைகள்) ஆகியவற்றில் அறுவைச் சிகிச்சை (நிலை 1) சேவைகளைச் செயல்படுத்துவதை நிறுத்துவதற்கான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டால் அறுவை சிகிச்சை உள்ளிட்ட மிகவும் சிறப்பு வாய்ந்த பராமரிப்புக்காக சில நோயாளிகள் கூடுதலாக பயணிக்க வேண்டும் என்பது எங்களுக்குத் தெரியும்.

8. நோயாளியின் பயணம் குறித்த எங்களது திட்டங்களின் தாக்கம் குறித்த மதிப்பீடு சரியானதாக இருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்களா?

   - ☐ ஆம்
   - ☐ இல்லை

9. இவை நிகழும் இடங்களில், நீண்ட பயணங்களைத் தவிர்ப்பதற்கு, குறைப்பதற்கு அல்லது ஈடு செய்வதற்கு மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும்?

**சமத்துவம் மற்றும் உடல்நல சமத்துவமின்மை**

CHD சேவைகள் பொருத்தமானதாகவும், அனைவரும் அணுகத்தக்கதாகவும், பல்வேறு நபர்களின் தேவைகளை நிறைவு செய்யக்கூடியதாகவும் இருக்கும் வகையில் எங்களது திட்டங்களால் பல்வேறு மக்கள் எவ்வாறு பாதிக்கப்படுவார்கள் என்பதை நாங்கள் புரிந்துகொண்டுள்ளதை உறுதி செய்ய விரும்புகிறோம்.

எங்களது அறிக்கையில், இந்தத் திட்டங்களின் சமத்துவம் மற்றும் சுகாதார சமத்துவமின்மையை நாங்கள் மதிப்பிட்டுள்ளோம். எங்களது மதிப்பீடு துல்லியமானது என நீங்கள் நினைக்கிறீர்களா?

☐ ஆம்

☐ இல்லை

10. நாங்கள் பரிசீலிக்க வேண்டும் என நீங்கள் நினைக்கின்ற வேறு ஏதாவது சமத்துவம் மற்றும் சுகாதார சமத்துவமின்மையின் தாக்கங்களையும், நாங்கள் கண்டறிந்துள்ள தாக்கங்களைத் தவிர்ப்பதற்கு, குறைப்பதற்கு அல்லது இழப்பீடு வழங்குவதற்கு மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும் என்பதையும் தயவுசெய்து விவரிக்கவும்.

**இதர தாக்கங்கள்**

முன்மொழியப்பட்ட மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டால் அவை நோயாளிகளுக்கும் அவர்களது குடும்பங்கள் / பராமரிப்பாளர்களுக்கும் முடிந்தவரை தடங்கலின்றி நிகழக்கூடும் என்பதை நாங்கள் உறுதி செய்துகொள்ள விரும்புகிறோம், எனவே எங்களது திட்டங்களின் இதர தாக்கங்களை நாங்கள் புரிந்துகொள்வது முக்கியமானதாகும்.

11. இதர அறியப்பட்ட தாக்கங்கள் குறித்த எங்களது விளக்கம் துல்லியமானதாக இருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்களா?

    ☐ ஆம்

    ☐ இல்லை

12. நாங்கள் பரிசீலிக்க வேண்டும் என நீங்கள் நினைக்கின்ற வேறு ஏதாவது தாக்கங்களையும், நாங்கள் கண்டறிந்துள்ள அல்லது வேறு ஏதாவது தாக்கங்களைத் தவிர்ப்பதற்கு, குறைப்பதற்கு அல்லது இழப்பீடு வழங்குவதற்கு மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும் என்பதையும் தயவுசெய்து விவரிக்கவும்.

**வேறு ஏதேனும் கருத்துக்கள்**

13. திட்டங்களைப் பற்றி வேறு ஏதாவது கருத்துக்கள் உங்களுக்கு இருக்கிறதா?

**உங்களைப் பற்றி**

14. நீங்கள் எந்த வயதுக் குழுவைச் சார்ந்தவர்?

- ☐ 18 வயதுக்குள்
- ☐ 19 - 29
- ☐ 30 - 39
- ☐ 40-49
- ☐ 50 - 59
- ☐ 60-69
- ☐ 70-79
- ☐ 80+
- ☐ கூற விரும்பவில்லை

15. உங்களுடைய பாலினத்தைக் குறிப்பிடவும்

- ☐ ஆண்
- ☐ பெண்
- ☐ இன்டர்செக்ஸ்
- ☐ டிரான்ஸ்
- ☐ நான்-பைனரி
- ☐ கூற விரும்பவில்லை

16. உங்களுக்கு இயலாமை இருப்பதாக நீங்கள் கருதுகிறீர்களா?

- ☐ ஆம்
- ☐ இல்லை
- ☐ கூற விரும்பவில்லை

17. உங்கள் இனமாக நீங்கள் கருதுவதை தயவுசெய்து தேர்ந்தெடுக்கவும். இனம் என்பது தேசியத்திலிருந்து வேறுபட்டதாகும்.

| **வெள்ளை இனத்தவர்** | **ஆசியர் அல்லது ஆசிய பிரிட்டிஷார்** | **மற்ற தனி இனக்கூட்டம்** |
|---|---|---|

| | | |
|---|---|---|
| ☐ வெல்ஸ்/ஆங்கிலம்/ஸ்காட்டிஷ்/ வடக்கு ஐரிஷ்/பிரிட்டிஷ்<br>☐ஐரிஷ்<br>☐ஜிப்சி அல்லது ஐரிஷ் டிராவலர்<br>☐வேறு ஏதேனும் வெள்ளையின பின்னணி | ☐இந்தியர்<br>☐பாகிஸ்தானி<br>☐பங்களாதேசி<br>☐வேறு ஏதேனும் ஆசியப் பின்னணி | ☐சீனர்<br>☐மற்ற தனி இனக்கூட்டம் இனக்கூட்டம் |
| **கலப்பினம்**<br><br>☐வெள்ளை மற்றும் கறுப்பு கறுப்பு கரீபியன்<br>☐வெள்ளை மற்றும் கறுப்பு கறுப்பு ஆப்பிரிக்கர்<br>☐வெள்ளை இனத்தவர் மற்றும் ஆசியர்<br>☐வேறு ஏதேனும் கலப்பினப் பின்னணி | **கறுப்பர் அல்லது கறுப்பு பிரிட்டிஷார்**<br>☐கறுப்பர் - கரீபியன்<br>☐கறுப்பர் - ஆப்பிரிக்கர்<br>☐வேறு ஏதேனும் கறுப்பு கறுப்பு இனப் பின்னணி | |

18. உங்கள் மதம் அல்லது நம்பிக்கையைத் தயவுசெய்து குறிப்பிடவும்

| | |
|---|---|
| ☐மதம் இல்லை | ☐முஸ்லீம் |
| ☐புத்த மதத்தினர் | ☐சீக்கியர் |
| ☐கிறிஸ்தவர் | ☐நாத்திகர் |
| ☐இந்து | ☐வேறு ஏதேனும் மதத்தவர் |
| ☐யூதர் | ☐கூற விரும்பவில்லை |

19. உங்கள் பாலியல் நாட்டத்தைப் பற்றி சிறப்பாக விவரிக்கின்ற விருப்பத்தேர்வை தயவுசெய்து குறிப்பிடவும்

☐ ஹெட்டிரோசெக்ஸுவல்
☐ கே

- ☐ லெஸ்பியன்
- ☐ பைசெக்ஸுவல்
- ☐ கூற விரும்பவில்லை